சுருக்கம்

வருவாய் நிருவாகம் - வருவாய்த்துறை அலுவலர்களின் பணிகள் மற்றும் கடமைகள் - மண்டல துணை வட்டாட்சியர்களுக்கான பணிகள் - நில உடமைப் பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்பட்ட தவறுகளை சரிசெய்வதற்கான பணி (Rectification of defects in the updating of Registry cases) - நீக்கம் - ஆணை வெளியிடப்படுகிறது.

அரசாணை (நிலை) எண்.385 வருவாய்(பொது-3)துறை

நாள்: 17.8.2004

படிக்கவும்:

1) அரசு ஆணை (நிலை) எண்.921, வருவாய், நாள் 15.6.1991.

மீண்டும் படிக்கவும்:

2) ஆணையர் மற்றும் இயக்குநர் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம் கடித எண்.ச2/69564/97(நி.அ) நாள் 6.4.2000.
3) ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலர் கடித எண்.46574/2000 (உ3), நாள் 20.10.2000.
4) அரசு கடித எண்.41178/பொது-4/1999-1, வருவாய், நாள் 9.1.2001.
5) சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரின் கடித எண்.பணி3(4)/8461/01, நாள் 06.2.2003.

*****

ஆணை:

ஒன்றில் படிக்கப்பட்ட அரசு ஆணையில் 222 மண்டல துணை வட்டாட்சியர் பணி இடங்கள் உருவாக்கி அவர்களுக்கு பணிகளும், பொறுப்புகளும் வழங்கி அரசு ஆணையிட்டுள்ளது.

2) மூன்றில் படிக்கப்பட்ட ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலரின் கடிதத்தில் மண்டல துணை வட்டாட்சியர்களுக்கு ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் ஒதுக்கப்பட்ட பணி பொறுப்புகளில், 23வது இனத்தில் உள்ள நிலஉடமைப் பதிவேடு மேம்பாடு திட்டத்தின் கீழ் ஏற்பட்ட தவறுகளை (Rectification of defects in the updating of Registry cases) சரி செய்வது ஒன்றாகும் என்றும், பல நிகழ்வுகளில் புறம்போக்கு இனங்கள் தவறாக வகைப்படுத்தப்பட்டுள்ளதாகவும், நில மாற்றம் ஒப்படை போன்ற நேர்வுகளின் போது இத்தவறு வகைபாடுகள் மாற்றப்பட வேண்டியுள்ளதாகவும், இத்தகைய நடவடிக்கைகள் மாவட்ட வருவாய் அலுவலரால் செய்யப்பட வேண்டியுள்ளதாகவும் தெரிவித்திருந்தார். ஈரோடு மாவட்ட வருவாய் அலுவலரின் கருத்தினை ஏற்று ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையின் இணைப்பில் வரிசை எண்.23-இல் உள்ள மண்டல துணை வட்டாட்சியருக்கு வழங்கப்பட்ட அதிகாரத்தை இரத்து செய்யுமாறு ஆணையர் மற்றும் இயக்குநர் நில அளவை மற்றும் நிலவரித்திட்டம் அரசுக்கு பரிந்துரைத்துள்ளார்.

3) இந்நேர்வு தொடர்பாக சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையரிடம் அறிக்கை கோரப்பட்டது. சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் தனது அறிக்கையில், நில உடமைப் பதிவேடு திட்டத்தின் கீழ் தவறுகள் ஏற்பட்டிருந்தால் அதனை வருவாய் கோட்டாட்சியரே சரி செய்யலாம் எனவும், ஏனெனில், நில உடமைப்பதிவுகள்

/த.பி.பா/

Verified RealEstate ™

வட்டாட்சியர் நிலையிலுள்ள அதிகாரிகளால் தான் பட்டா மாறுதல் உத்திரவு பிறப்பிக்கப்படுகிறது என தெரிவித்துள்ளதாகவும், நிலஉடமை மேம்பாடு திட்டத்தின் கீழ் நில உரிமையாளர்கள் பெயர்கள் தவறுதலாக பதியப்பட்டிருப்பின் உரிய விசாரணை மேற்கொண்டு ஆணை பிறப்பிக்கும் அதிகாரம் மாவட்ட வருவாய் அதிகாரிக்கே உள்ளது எனவும், எனவே ஒன்றில் படிக்கப்பட்ட அரசாணையில் மண்டல துணை வட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்டுள்ள வரிசை எண்.23-இல் உள்ள, அதிகாரத்தை இரத்து செய்யலாம் என பரிந்துரை செய்துள்ளார்.

4) அரசு இந்நேர்வினை கவனமாக ஆய்வு செய்தது. ஆணையர், நில அளவை மற்றும் நிலவரித்திட்டம், சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் ஆகியோரது பரிந்துரையினை ஏற்று, நில உடமைப் பதிவேடு திட்டத்தின் கீழ் பதிவுகளில் தவறு ஏற்பட்டிருந்தால் அத்தகைய தவறுகளை மாவட்ட வருவாய் அலுவலர் தீவிர விசாரணை செய்த பின்னரே சரிசெய்ய இயலும் என்பதால், அரசாணை (நிலை) எண்.921, வருவாய், நாள் 5.6.91-இல் மண்டல துணை வட்டாட்சியர்களுக்கு வழங்கப்பட்ட பொறுப்புகளில் இருந்து 23ம் இனத்தில் உள்ள "நில உடமைப்பதிவு மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் ஏற்பட்ட தவறுகளை சரிசெய்து (Rectification of defects in the updating of Registry cases) என்பதை நீக்கி அரசு ஆணையிடுகிறது.

5) சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர் மேலே பத்தி 4-இல் உள்ள ஆணையினை செயல்படுத்துவதுடன் நில உடமைப்பதிவு மேம்பாட்டுத்திட்டத்தின் கீழ், வகைப்பாடு மாற்றங்களில் (classification of land) இதுகாறும் ஏற்பட்டுள்ள தவறுகளை நிவர்த்தி செய்வதற்கு அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்களுக்கும் தக்க அறிவுரைகள் வழங்கி, அதனை கண்காணிக்குமாறு அறிவுறுத்தப்படுகின்றார்.

(ஆளுநரின் ஆணைப்படி)

இரா.சத்பதி,
அரசு செயலாளர்.

பெறுநர்
சிறப்பு ஆணையர் மற்றும் வருவாய் நிர்வாக ஆணையர், சென்னை-5.
சிறப்பு ஆணையர் மற்றும் நில நிர்வாக ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5.
ஆணையர் மற்றும் இயக்குநர் நிலஅளவை மற்றும் நிலவரித்திட்டம், சேப்பாக்கம், சென்னை-5.
சிறப்பு ஆணையர் மற்றும் நிலச்சீர்திருத்த ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5.
சிறப்பு ஆணையர் மற்றும் வேளாண்மை வருமானவரி ஆணையர், சேப்பாக்கம், சென்னை-5.
சிறப்பு ஆணையர் மற்றும் ஆணையர் நகர்ப்புற நில உச்சவரம்பு மற்றும் நகர்ப்புற நிலவரி, சென்னை-5.
அனைத்து மாவட்ட ஆட்சித்தலைவர்கள்.
அனைத்து மாவட்ட வருவாய் அலுவலர்கள்.
நகல்:
பணியாளர் மற்றும் நிர்வாகச் சீர்திருத்த துறை, சென்னை-9.
சட்டத்துறை, சென்னை-9.
மாண்புமிகு வருவாய்த்துறை அமைச்சரின் சிறப்பு நேர்முக உதவியாளர், சென்னை-9.
வருவாய் (நிமு.I, II, III, IV, V, VI பிரிவுகள்) துறை, சென்னை-9.
இ.கோ./உதிரி

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

பிரிவு அலுவலர்.

Verified Red Flag